19/05/2026

# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

## இலங்கை புகையிரத சேவைகள்

## 30 எண்ணிக்கையான ருமேனியன் வகையான பயணிகள் பெட்டிகளின் திட்டமிடப்பட்ட திருத்தவேலைகளுக்கான பெறுகை

### பெறுகை இல. SRS/F.8182

01. இலங்கை புகையிரத சேவைக்கு 30 எண்ணிக்கையான ருமேனியன் வகையான பயணிகள் பெட்டிகளின் திட்டமிடப்பட்ட திருத்தவேலைகளுக்காக உள்நாட்டு உற்பத்தியாளர்கள் / வழங்குநர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை கொழும்பு, இலங்கை புகையிரத சேவைகள் சார்பில் திணைக்களக் கொள்வனவுக் குழு (மேஜர்) தவிசாளர் பெற்றுக்கொள்வார்.

02. தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக் கோரல் மூலம் (NCB) விலைமனுச் செயற்பாடானது நடாத்தப்படும்.

03. கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியிலிருந்து 2026-05-19ஆம் திகதி முதல் 2026-06-08ஆம் திகதி வரையில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 3.00 மணி வரையான வேலை நாட்களில் ஆர்வமுள்ள தகுதி வாய்ந்த விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பதுடன் விலைமனு ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

**பிரதிப் பொது முகாமையாளர் (பெறுகைகள்),**
**புகையிரத பெறுகைகள் உப திணைக்களம்,**
**ஒல்கொட் மாவத்தை, கொழும்பு-10. இலங்கை.**

| | | |
|---|---|---|
| **தொலைபேசி** | : | **94 (11) 2438078 அல்லது 94 (11) 4600202** |
| **தொலைநகல்** | : | **94 (11) 2432044** |
| **மின்னஞ்சல்** | : | **srs.slr@gmail.com**, tender1.srs@gmail.com |
| **இணையதளம்** | : | **www.railway.gov.lk** |

04. விலைமனுதாரர் புகையிரத சேவை/கடல்சார்/கைத்தொழில் மின் உற்பத்திப் பயன்பாடுகளில் உள்ள கைத்தொழில் டீசல் இயந்திரங்களின் பெரிய அளவிலான சீரமைப்புப் பணிகளை மேற்கொள்வதில் திறனும் அனுபவமும் பெற்றிருக்க வேண்டும். மேலும், இயந்திர சீரமைப்பு/திருத்தவேலை பணிகள் தொடர்பாக இலங்கை புகையிரத சேவையால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு புகழ்பெற்ற அமைப்பால் வழங்கப்பட்ட, செல்லுபடியாகும் ISO 9001:2015 தர முகாமைத்துவ முறைமை சான்றிதழ் அல்லது அதற்கு இணையான சான்றிதழையும் கொண்டிருக்க வேண்டும்.

05. மீளளிக்கப்படாத பெறுகைக் கட்டணமாக 25,250.00 ரூபாவை மட்டும் செலுத்துவதன் பேரில் 2026-05-19ஆம் திகதி முதல் 2026-06-08ஆம் திகதி பி.ப. 3.00 மணி வரையில் இலங்கையில் கொழும்பு-10, ஒல்கொட் மாவத்தை, புகையிரத பெறுகைகள் உப திணைக்கள அலுவலகம், பிரதிப் பொது முகாமையாளர் (பெறுகைகள்) எனும் முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் ஆங்கில மொழியிலான முழுமையான விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.

06. சகல விலைமனுக்களுடனும் விலைக்கோரல் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைக்கோரல் பிணை முறியானது இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்டதும் இலங்கையில் செயற்படும் வங்கியொன்றினால் வழங்கப்பட்ட 1,350,000.00 ரூபா பெறுமதியுடைய நிபந்தனையற்ற உத்தரவாதமாகவிருத்தல் வேண்டும்.

07. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று 2026-06-01ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கொழும்பு 09, இல. 575, பேஸ்லைன் வீதி, Motive Power உப திணைக்களம், பிரதான பொறியியலாளர் (Motive Power) அலுவலகத்தில் இடம்பெறும்.

08. விலைமனுக்கள் 2026-06-09ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன் ஒப்படைக்கப்படல் வேண்டும் என்பதுடன் விலைமனுக்கள் முடிவுறுத்தல் நேரத்தின் பின் உடன் திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் விலைமனுக்கள் திறக்கப்படும் வேளையில் கலந்துகொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர். பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு (மேஜர்),**
**பிரதிப் பொது முகாமையாளர் (பெறுகை)**
**இலங்கை புகையிரத சேவைகள்,**
**இல. 1347, ஒல்கொட் மாவத்தை,**
**கொழும்பு-10.**

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு (மேஜர்),**
**இலங்கை புகையிரத சேவைகள்.**

**Ref. No. SRS/F.8182**